1967 ஜூலை 10]

திரு. கொளத்தூர் கோதண்டம்: சார், கொடுக்கப்படும் நிவாரணம், நஞ்சை நிலங்கள், தோட்டங்கள், வீடுகள் என்று பாதிக்கப்பட்டவைகளின் அடிப்படையில் கொடுக்கப்படுகிறதா, அல்லது வேறு எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: ஆங்காங்கு ஏற்பட்டிருக்கும் சேதங்களுக்குத் தக்கபடி நிவாரணம் நிர்ணயிக்கப்படுகிறது. கனம் உறுப்பினர் அவர்கள் பகுதியைப் பொறுத்தவரையில், அதிகமான தென்னை மரங்கள், 1·5 லட்சம் வரை, எடக்கறுடிப் பகுதியில் சேதம் அடைந்திருக்கின்றன. அந்தப் பகுதிக்கு 1,13,000 தென்னங் கன்றுகளை 50 சதவிகித விலையில் கொடுக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் ஒவ்வொரு கன்றுக்கும் 50 பைசா வரையில் சப்சிடியாகக் கொடுக்க வேண்டுமென்று, கனம் உறுப்பினருடைய பகுதியைப் பொறுத்தவரையில், பிரத்தியேகமான கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

THIRU K. VINAYAKAM: Sir, whereas cyclone and its havoc are considered to be acts of God and whereas the relief given to the cyclone-affected people is very negligible when compared to the colossal loss sustained by the human beings and their property. will the Government think of the possibility of reimbursing that loss from our own coffers instead of waiting for aid from the Central Government which do not seem to take a reasonable attitude in regard to this matter?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: God is not very kind to our coffers.

•

* 232 வினா.—திரு. க. இராமமூர்த்தி: மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:—

(அ) திண்டிவனம் பகுதியில் 1966-ல் அடித்த கோர புயலுக்காக நிவாரணமாக அளித்த தொகை எவ்வளவு?

(இ) இதில் திண்டிவனம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு?

(உ) இதில் இடிந்துபோன கூரை வீடுகளுக்கு கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(எ) இந்த குடிசைகளுக்கான புயல் நிவாரணத் தொகை புறம்போக்கு இடங்களில் கட்டியிருந்த குடிசைகளுக்கு கிடைக்காதது அரசாங்கத்திற்கு தெரியுமா?

(ஐ) ஆம் எனில், அவர்களுக்கும் இந்த நிவாரணத்தொகை கிடைக்க அரசாங்கம் ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) ரூ. 16,60,078·00.

(இ) ரூ. 1,86,910·00.

(உ) ரூ. 12,45,058·00.

(எ) புறம்போக்கு நிலங்களில் கட்டியிருந்த குடிசைகளில் இடிந்தவைகளை கட்டுவதற்கும் நிவாரணம் அளிக்கப்பெற்றது.

(ஐ) கேள்விக்கு இடமில்லை.

திரு. க. இராமமூர்த்தி : திண்டிவனம் நகர எல்லைக்குள் கிடங்கல் பகுதியில் புறம்போக்கு நிலத்தில் வீடுகள் கட்டியிருந்தார்கள் என்பதற்காக இன்றுவரை பணம் கொடுக்கவில்லை. அதனால் அவர்கள் மகஜர் முதற்கொண்டு மனுக்கள் முதலியவைகளை அரசாங்கத்திற்கு எழுதி வருவது தெரியுமா? அதன் மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : திண்டிவனம் நகர எல்லைக்குள் மட்டும் 1,86,910 ரூபாய் அந்தக் குடிசைகளுக்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. கனம் உறுப்பினர் புகார் செய்கிற குடிசைகள் எது என்பதை கலெக்டரின் கவனத்திற்குக் கொண்டு வருவாரேயானால் அதன் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. வி. டி. அண்ணாமலை : பெருவணக்கத்திற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்தக் கோரப் புயல் நிவாரணத்திற்கு சென்னை சர்க்கார் நிதி ஒதுக்கியது எவ்வளவு? மத்திய சர்க்கார் அதற்கு ஒதுக்கிய மானியம் எவ்வளவு? பல கோடி கொடுப்பதாக வாக்களித்திருந்தார் நம்முடைய முதலமைச்சரவர்கள். ஆனால் ஒதுக்கியது எவ்வளவு? தவிர வெளியார் நன்கொடைகள் கொடுத்தது எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஏற்கனவே இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டேன். இப்போது நிதிநிலைமையை அனுசரித்து 96 லட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இரண்டு கோடி ரூபாய் கடனை மத்திய அரசாங்கம் கொடுத்திருக்கிறது என்பதை ஏற்கனவே சொன்னேன். இந்தக் கேள்வியிலிருந்து இது எழவில்லை.

திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, திண்டிவனம் நகர எல்லைக்குள் பாதிக்கப்பட்ட ரோடுகள், நகராட்சிக்குச் சொந்தமான ரோடுகள், கட்டிடங்கள் முதலியவற்றிற்காக இதுவரை அரசாங்கம் 50,000 ரூபாய் கடனைக் கொடுத்திருக்கிறது. ஏற்கனவே இரண்டு லட்சம் ரூபாய் கடன் கொடுப்பதாக வாக்களித்திருக்கிறது. 50.000 ரூபாயோடு நிறுத்திவிடலாம் என்ற யோசனை இருப்பதாகத் திண்டிவனம் நகராட்சித் தலைவருக்கு அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. அதை மறுபடியும் ஆலோசித்து இரண்டு லட்ச ரூபாய் கடனை சர்க்கார் தருவதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மனமில்லாததால் அல்ல; மார்க்கமில்லாததால்தான் ஐம்பதாயிரம் ரூபாயோடு நிறுத்துகிறது.